வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com  மலர் : 06  17.09.2025 புதன்கிழமை  இதழ் : 260  பக்கங்கள் : 08

# கண்காணிப்புடன் இலங்கைக்கு காலநீடிப்பை வழங்க வேண்டும்

## சர்வதேச மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்து

ஜெனிவா, செப்ரெம்பர் 17

**இலங்கைமீதான கண்காணிப்பை தொடரும் அதேநேரம், பொறுப்புக் கூறல் செயல்திட்டத்தின் கீழ் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனைக்கு வழங்கப்பட்ட ஆணையை குறைந்தபட்சம் இரு ஆண்டுகளுக்கு நீடிக்க ஆதரவளிக்கவேண்டும் - இவ்வாறு ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு - கண்காணிப்பு நாடுகளிடம் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கூட்டாகக் கோரியுள்ளன.**

சர்வதேச மன்னிப்பு சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச ஜூரர்கள் ஆணைக் குழு, மனித உரிமைகள் - அபிவிருத்திக்கான சர்வதேச பேரவை ஆகியவை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு - கண்காணிப்பு நாடுகளிடம் கூட்டு அறிக்கை மூலமாக இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

மேலும், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கான புதிய பிரேரணையை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை நீங்கள் ஆரம்பித்துள்ள நிலையில், இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயல்திட்டத்தின் ஊடாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனைக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆணையை குறைந்தபட்சம் மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கக்கூடிய வகையில் வலுவான பிரேரணையை நிறைவேற்றுவதற்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

07

# 223 கோடி ரூபாய் செலவில் யாழ். பல்கலைக்கு கட்டடம்

## அனுமதி வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, செப். 17

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு 223 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் 5 மாடிக் கட்டடம் அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகத்தின் துணை சுகாதார விஞ்ஞான பீடத்துக்கு விரிவுரை மண்டபங்கள், ஆய்வகங்கள், கேட்போர் கூடம் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் இந்தக் கட்டடம் அமையவுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சர் சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

2006ஆம் ஆண்டு அரச பல்கலைக்கழகங்களில் துணை சுகாதார விஞ்ஞானம்

07

# கெஹலியவுக்கு நீதிமன்று பிணை

கொழும்பு, செப். 17

சுகாதாரத்துறை முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 12 பிரதிவாதிகளை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று பிணையில் விடுவித்தது.

இதேநேரம், இந்த 12 பேருக்கும் எதிராக நேற்றைய தினம் 13 குற்றச்சாட்டுகளை கொண்ட குற்றப்

07

# மாகாண தேர்தலை நடத்தினால் அரசுக்கு மக்கள் பாடம் புகட்டுவர்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

திருகோணமலை, செப். 17

மாகாண சபைகள் தேர்தலை நடத்தினால் நாட்டு மக்கள் அனைவரும் அரசாங்கத்துக்கு நல்ல பாடம் புகட்டுவர் - அதற்காக அவர்கள் காத்திருக்கின்றனர்", இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

நேற்றைய தினம் திருகோணமலை முத்துநகர் பகுதிக்கு சென்று மக்களை எதிர்க்கட்சி தலைவர் சந்தித்தார். இதன் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

மேலும் 50 ஆண்டுகளுக்கும் மேலாக பயிர் செய்து வரும் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தகரவெட்டுவான், மத்திய வெளி, முத்து நகரில் 53 வருடங்களாக பயிர் செய்து வந்த விவசாயிகள்

07

# அரிசியை பதுக்கினால் இறக்குமதி செய்வோம்!

## அரசாங்கம் எச்சரிக்கை

கொழும்பு, செப். 17

கீரி சம்பா நெல்லை மிகப்பெரிய அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் பதுக்கி வைத்திருந்தால் அரசாங்கம் அரிசியை இறக்குமதி செய்யும் நடவடிக்கையை முன்னெடுக்கும் - இவ்வாறு அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ எச்சரித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடந்த சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

மேலும், மிகப்பெரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் கீரி சம்பா நெல்லை பதுக்கி வைத்துள்ளார்கள் என்று கூறுவதற்கு போதிய தகவல்கள் இல்லை. எனினும், 40 ஆயிரம் மெற்றிக் தொன்

07

# போதைப்பொருளுடன் 524 பெண்கள் கைது!

கொழும்பு, செப். 17

கடந்த 8 மாதங்களில் போதைப்பொருள் சார் குற்றங்கள் தொடர்பில் 524 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

22 முதல் 60 வயதுக்கு உட்பட்ட பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த 2024 ஆம் ஆண்டு போதைப் பொருட்கள் வைத்திருந்த சம்பவம் தொடர்பில் 2 இலட்சத்து 28 ஆயிரம் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸாரின் தரவுகள் குறிப்பிட்டுள்ளன. இது, 2023 ஆம் ஆண்டு

07

# வெளிநாடு வாழ் இலங்கையர் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம்!

கொழும்பு, செப். 17

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் தேர்தல்களில் வாக்களிக்க வசதியாக சட்டங்களை திருத்த - உருவாக்குவது தொடர்பில் ஆராய குழு ஒன்றை நிய மிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் மாநாட்டில் அமைச்சர் நளிந்த ஜய திஸ்ஸ தெரிவித்தவை வருமாறு,

07

# இ.போ.ச.வுக்கு பெண் சாரதி, நடத்துநர்கள்!

கொழும்பு, செப். 17

எதிர்காலத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு பெண் சாரதிகள், நடத்துநர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் நேற்று நடை பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

07

# மாகாண சபை தேர்தலை முடிந்தால் நடத்தி காட்டுக

## பெரமுன கட்சி அரசுக்கு சவால்

கொழும்பு, செப். 17

நல்லாட்சி காலத்தில் மாகாண சபைகள் தேர்தல் மாயமாவதற்கு ஜே. வி. பியும் துணை நின்றது. இன்று ஜனநாயகம் பற்றிப் பாடமெடுக்கும் அந்தக் கட்சி முடிந்தால் மாகாண சபைகள் தேர்தலை நடத்தி காட்ட வேண்டும் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், "30 வருடகால போரை முடிவுக்குக் கொண்டுவந்த பிறகு வடக்கு, கிழக்கு மக்களுக்கு அவர்களுக்குரிய பிரதிநிதிகளை தெரிவு

07

# மின்சார சபையின் ஊழியர்கள் சுகயீன விடுமுறை போராட்டம்

கொழும்பு, செப். 17

இலங்கை மின்சார சபையை 4 நிறுவனங்களாக பிரிக்கும் அரசின் திட்டத்தை எதிர்த்து இரு நாட்கள் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தின் நிறைவேற்று குழு உறுப்பினர் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமது கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்காவிடின் எதிர்வரும் 21ஆம் திகதியின் பின்னர் தொழிற் சங்க போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று இலங்கை மின்சார சபை சுதந்திர சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

07

# மட்டக்களப்பு அரச அதிபராக அருள்ராஜை நியமிக்க அனுமதி

கொழும்பு, செப். 17

மட்டக்களப்பு அரசாங்க அதிபராக ஜே. எஸ். அருள்ராஜை நியமிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைய இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை நிர்வாக சேவையின் சிறப்பு தர அதிகாரியான ஜே. ஜே. முரளிதரன் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக தற்போது பணியாற்றி வருகின்றார். இவர் எதிர்வரும் 26ஆம் திகதி ஓய்வு

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுவில் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு கூட்டம்!

## தமிழ்த் தேசிய கட்சிகளின் எம்.பிக்கள் பங்கேற்கவில்லை

யாழ்ப்பாணம், செப். 17

உடுவில் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இணைத் தலைவருமான எஸ். சிறீபவானந்தராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில், பிரதேசத்தின் அபிவிருத்தி, குடிதண்ணீர், கல்வி, விவசாயம், சுகாதாரம், சுற்றுச்சூழல், வெள்ள நீர் அபாயம் போதைப்பொருள் பாவனை தொடர்பான பிரச்னைகள் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

இதேநேரம், வலி. தெற்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா பிரகாஷ், யாழ் மாவட்டத்தின் திணைக்களங்களின் அதிகாரிகள், கிராம, பொது அமைப்புகளை சேர்ந்தோர், பொது மக்கள் பங்கேற்றனர். (ஐ)



# பருத்தித்துறையில் மர நடுகை

யாழ்ப்பாணம், செப். 17

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேச சபையினர் மர நடுகையை நேற்று மேற்கொண்டனர்.

“வளமான நாடு அழகான வாழ்க்கை எனும் நோக்கத்தை அடைவதற்கான மறுமலர்ச்சி நகரத்தை உருவாக்குதல்” எனும் கருப்பொருள் திட்டத்தின் கீழ் மரநடுகை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, பருத்தித்துறை பிரதேச சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தை அண்டிய பகுதிகளில் பனம் விதைகளும் மரங்களும் நடுகை செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸ், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் கணைச்செல்வன், பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் இராணுவ வீரர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ-05)

# முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில்!

## ரவிகரன் எம்.பி நேரில் ஆராய்வு

முல்லைத்தீவு, செப். 17

முல்லைத்தீவு கடற்பரப்பில் அத்துமீறிய சட்டவிரோத கடற்றொழில் செயல்பாடுகள் அதிகரித்திருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையிட்டுள்ளனர்.

இதன்படி, நேற்று முன்தினம் இரவு பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடற்றொழிலாளர்களுடன் கடலுக்கு சென்று முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத செயல்பாடுகள் இடம்பெறுவதை நேரடியாக பார்வையிட்டதுடன், அதில் ஈடுபட்ட பலரையும் கடுமையாக எச்சரித்திருந்தார்.


குறிப்பாக கொக்கிளாய் முகத்துவாரம், நாயாறு உள்ளிட்ட பகுதிகளில் அத்துமீறி தங்கியுள்ள நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் மீனவர்களாலும், திருகோணமலைப் பகுதி மீனவர்களாலுமே இவ்வாறு மிக அதிகளவில் வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல் மற்றும் சுருக்குவலை உள்ளிட்ட சட்டவிரோத கடற்றொழில் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஐ)

# சங்கானையில் நடமாடும் சேவை; நூற்றுக்கணக்கானோருக்கு நன்மை!

யாழ்ப்பாணம், செப். 17

கிளீன் சிறீ லங்கா வேலைத் திட்டத்தின் கீழ் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம், சங்கானை பிரதேச செயலகம் இணைந்து நடமாடும் சேவையை நேற்று செவ்வாய்க்கிழமை நடத்தின.

இந்த நடமாடும் சேவையில் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன், வலி. மேற்கு பிரதேச செயலகத்தின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்தனர்.



இதில், ஆட்பதிவு, ஓய்வூதியம், பிறப்பு - இறப்பு பதிவு, மோட்டார் வாகன பதிவு, வாகன வருமான அனுமதிப் பத்திரம், பிரதேச சபைகளால் வழங்கப்படும் சேவைகள், பொலிஸ் திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகள், மனிதவள அபிவிருத்தி தொடர்பான சேவைகள், தொழில் வழிகாட்டல்கள், திறன் அபிவிருத்தி தொடர்பான சேவைகள், தொழிற்கல்வி வழிகாட்டல்கள், சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகள், முதியோர் தேசிய செயலகத்தினால் வழங்கப்படும் சேவைகள், காணி தொடர்பான சேவைகள், மருத்துவ முகாம் - பொது மருத்துவ பரிசோதனை, கண்புரை பரிசோதனை, இலவச மூக்குக்கண்ணாடி வழங்குதல் (வறியவர்களுக்கு) போன்ற சேவைகள் வழங்கப்பட்டன.

இந்த நடமாடு சேவையில் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு சேவைகளை பெற்றனர். (ஐ-05)

# தியாக தீபம் திலீபன் 2ஆம் நாள் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், செப். 17

தியாக தீபம் தீலிபனின் இரண்டாம் நாள் நினைவேந்தல் நேற்று செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

நல்லூரில் அமைந்துள்ள அவரின் நினைவிடத்தில் இந்த நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் போது சுடரேற்றி மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நேற்று முன்தினம் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மணல்திட்டில் கைவிடப்பட்ட 6 பேர் கடற்படையால் மீட்பு!

மன்னார், செப். 17

தலைமன்னார், மணல்திட்டு பகுதியில் ஆட்கடத்தல்காரர்களால் கைவிடப்பட்ட 6 பேரை கடற்படையினர் மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வடமத்திய கடற்படை கட்டளைப் பிரிவின் நடவடிக்கையில், தலைமன்னாரின் ஏழாம் மணல்திட்டில் உடல்நல குறைவால் பாதிக்கப்பட்டிருந்த 6 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இவர்கள், 8 முதல் 56 வயதுக்குட்பட்ட வவுனியா, மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மீட்கப்பட்ட அனைவரும் மேலதிக விசாரணைகளுக்காக அவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# முழங்காவில் மகா வித்தியாலய மாணவர்களின் ஒன்றுகூடல்!



கிளிநொச்சி, செப். 17

முழங்காவில் மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு அதிபர் சிவானந்தி பரதன் தலைமையில் அண்மையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் உதவி அதிபரும் மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளருமான எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி கலந்து கொண்டார். அத்துடன், அயல் பாட சாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களும் கலந்து கொண்டனர். (ஐ)

# மந்துவில் படுகொலை; நினைவேந்தப்பட்டது!

முல்லைத்தீவு, செப். 17

மந்துவில் படுகொலையின் 26ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - மந்துவில் பகுதியில் 1999ஆம் ஆண்டு விமானப் படை நடத்திய தாக்குதல்களில் 24 அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

இதில், உயிரிழந்தவர்களின் உறவினர்களால் இந்த நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் அமைப்பின் தலைவர் [illegible] தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் உட்பட ஏராளமானவர்கள் பங்கேற்றனர். (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
17.09.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## நீதியமைச்சரின் அறிவிப்பு

"தமிழ் கட்சிகளின் கூக்குரலுக்கு அரசாங்கம் அடிபணியாது", என்று நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்திருக்கிறார். "ஜெனிவாவுக்கு சென்று முறையிட்டாலும் அரசாங்கம் உள்ளக விசாரணை மூலம்தான் விடயங்களைக் கையாளும். ஓர் இறைமையுள்ள நாட்டின்மீது சர்வதேசம் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது", என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். நீதி அமைச்சரின் இந்தக் கருத்து ஆச்சரியமானதல்ல. ஆனால், தமிழ் கட்சிகள் ஜே. வி. பியும் இறுதி யுத்தத்தின்போது இனப்படுகொலை புரிந்தது என்று கூறுவதன் மூலம் மட்டும் இந்த விடயத்தைக் கையாண்டுவிட முடியுமா?

மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரும் உள்ளகப் பொறிமுறை பற்றித்தான் பேசுகிறார். வேண்டுமானால், அவர்கள் பயன்படுத்தும் சொற்களில் சில மயக்கங்கள் இருக்கலாம். ஆனால், பேரவையின் தீர்மானங்கள் கடந்த பதினாறு வருட காலமாக எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறன என்பதை நாம் கண்டுகொண்டுதான் இருக்கிறோம். அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இன்றி விடயங்களை இலங்கைத் தீவில் முன்னெடுக்க முடியாது.

ஒப்பீட்டு அடிப்படையில் கடந்த பதினாறு வருடங்களில் ஏனைய ஆட்சியாளர்களை விடவும் ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சற்று வித்தியாசமான அணுகுமுறைகளை காண்பிக்கிறது என்பது உண்மை. ஆனால், என்னதான் வித்தியாசத்தைக் காண்பித்தாலும்கூட முன்னாள் ஆட்சியாளர்களை சர்வதேச நீதிமன்றத்திடம் ஒப்படைக்கத் தயாரென்று அவர்கள் கூறப் போவதில்லை. உதாரணமாக பிலிப்பைன்ஸ் புதிய அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதிமீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியது.

இந்த அடிப்படையில் அவரை கைது செய்து சர்வதேச நீதிமன்றத்தில் ஒப்படைத்தது. ஆனால், இலங்கைத் தீவில் அவ்வாறு நடக்கப் போவதில்லை. ஏனெனில், சிங்கள தேசியவாத உளவியலுக்கு ஜே. வி. பியும் கட்டுப்பட்டுத்தான் இருக்கிறது. எனவே, தேசிய மக்கள் சக்தி முன்னைய ஆட்சியாளர்களை தவறானவர்கள் என்று நிரூபிக்க முற்படுகின்றபோதிலும்கூட அவர்களை சர்வதேசத்திடம் ஒப்படைப்பதை ஆதரிக்கப் போவதில்லை.

இந்த அடிப்படையில்தான் சர்வதேச தலையீடுகளை முற்றிலுமாக எதிர்க்கிறது. சர்வதேசத் தலையீடுகளை ஆதரித்தால், எதிர்த் தரப்புகள் தாங்கள் அடிபணிந்து விட்டதான பிரசாரங்களை முன்னெடுக்கும். அது இறுதியில் சிங்கள மக்களைத் தங்களுக்கு எதிர் நிலையில் அணிதிரட்டப் பயன்படும் என்றே அவர்கள் கருதுகின்றனர். தங்களுடைய ஆட்சியை இழந்தாலும் பரவாயில்லை - நீதியை நிலைநாட்டுவோம் என்னும் அடிப்படையில் இலங்கையில் எவரும் செயல்படப் போவதில்லை. சுவர் இருந்தால்தானே சித்திரம் வரையலாம் என்னும் அடிப்படையில் தங்களுடைய ஆட்சியை பாதுகாத்துக் கொண்டு - அதற்கான புறச்சூழலை ஏற்படுத்திக் கொண்டுதான் ஜே. வி. பி. அதன் நகர்வுகளைத் திட்டமிடும்.

இதனைப் புரிந்து கொண்டுதான் இலங்கைத் தீவில் சர்வதேச விசாரணைக்கான ஆசைகளை வெளியிட வேண்டும். ஆசைகளில் நியாயம் இருக்கலாம். ஆனால், ஆசைகளை நிவர்த்தி செய்வதற்கான புறச்சூழல் இருக்கிறதா என்றால் முற்றிலுமாக இல்லை. இந்த இடத்தில் என்ன செய்ய முடியும்? சர்வதேச விசாரணை என்று கூறிக் கொண்டு நாட்களை நகர்த்தலாம் - நாங்கள் சர்வதேச விசாரணை என்று கூறிக் கொண்டிருக்க அரசாங்கங்களோ அதனை ஒருபோதும் ஏற்கப் போவதில்லை என்று கூறிக் கொண்டிருக்கும். இதில், சர்வதேசம் என்ன செய்யலாம் என்றால் அவ்வப்போது அவர்களின் எல்லைக்குள் கதைகளைக் கூறிக்கொண்டிருப்பர். இறுதியில் தமிழ் மக்களோ இருப்பதையும் இழந்துபோய் கவனிப்பாரற்ற நிலைக்குச் செல்வர்.

உடுவில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

# பிரதேச சபையின் செயலாளருக்கு பக்கத்து ஆசனம் வழங்கிய எம்.பி.



யாழ்ப்பாணம், செப். 17

உடுவில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கு வருகைதந்த உடுவில் பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஷ் விடுத்த கோரிக்கையை ஏற்று தனக்கு பக்கத்தில் ஆசனத்தை உடுவில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் பவானந்தராஜா வழங்கினார்.

நேற்று செவ்வாய்க் கிழமை உடுவில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் ஆரம்பமானது.

இதன்போது கூட்டத் திற்கு வருகை தந்த உடுவில் பிரதேச சபையின் தவிசாளர் பிரகாஷ் தெற்கில் இடம் பெறும் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் அந்த பகுதியின் தவிசாளருக்கு மேல் இருக்கையில் ஆசனம் வழங்கப்படுகிறது .

இலங்கையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் சட்டம் தெற்கிற்கு ஒன்று வடக்கிற்கு ஒன்றாக இருக்க முடியாது. எனக்கு உரிய ஆசனம் வேண்டும் - என்றார்.

இதன்போது பதில் வழங்கிய அபிவிருத்தி குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா, இங்கு எந்த அரசியலும் இல்லை.

அபிவிருத்தி தான் உங் கள் கோரிக்கையை ஏற்கி றேன் வாருங்கள் என்றார்.

கீழ் வரிசையில் அமர்ந்திருந்த தவிசாளர் எழுந்து சென்று அபிவிருத்திக் குழு தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பவானந்தராஜாவுக்கு கைகொடுத்து மேல் இருக்கையில் அமர்ந்தார்.

(அ)

# உள்ளூராட்சி வாரத்தின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் வலி.தெற்கு பிரதேச சபையில்

யாழ்ப்பாணம், செப். 17

வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் "வளமான நாடும் அழகான வாழ்க்கையும் தொனியில் முன்னெடுக்கப்பட்டுவரும் உள்ளூராட்சி வாரத்தின் இரண்டாம் நாள் செயல்பாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

நேற்று காலை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்தில் பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகள் அகற்றல் சிரமதானப் பணிகள் மற்றும் அது தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள சுன்னாகம் நகரப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டன.

சுன்னாகம் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா பிரகாஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உறுப்பினர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், சுண்ணாகம் நகர வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

(அ)

# கிளிநொச்சியில் இராணுவத்தின் வசமிருந்த காணிகள் விடுவிப்பு

கிளிநொச்சி, செப். 17

கிளிநொச்சி மாவட்டத்தில் பாதுகாப்பு படையினர் வசமிருந்த முப்பது ஏக்கர் வரையான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2009 ஆண்டு தொடக்கம் பாதுகாப்பு படையினர் வசமிருந்த தனியார் மற்றும் அரச காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வந்துள்ளன.

அதன் தொடர்சியாக கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவிலுள்ள 07 ஏக்கர் காணி கடந்த 07ஆம் திகதி விடுவிக்கப்பட்டு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப் பட்டுள்ளது.

குறித்த காணி தற்காலிகமாக மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திடம் பொறுப்பில் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், இதே போன்று நல்லூர் கிராம அலுவலர் பிரிவிலுள்ள முட்கொம்பன் பகுதியில் இராணுவத்தினர் வசமிருந்த 20 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள இயக்கச்சி பகுதியில் இராணுவத்தினர் வசமிருந்த தனியாருக்கு சொந்தமான எட்டுப் பேரின் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 17 புதன்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 01
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சூன்ய




**மேடம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள் . தைரியம் கூடும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உறவினர்களுடன் பகைமை வரக் கூடும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் .

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**கன்னி**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும்.

**துலாம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய மாற்றம் ஏற்படும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். மறைமுக விமர்சனங்கள் வந்து போகும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**தனுசு**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தயோகத்தில் உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**கும்பம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**மீனம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை எல்லாம் மனதில் நிழலாடும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு துவிச்சக்கர வண்டிகளுக்கு ஸ்ரிக்கர்



வவுனியா, செப். 17

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள், பொதுமக்களின் துவிச்சக்கர வண்டிகளுக்கு ஒளிரூட்டும் ஸ்ரிக்கர் ஒட்டும் செயல்பாடு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையால் நேற்றுக்காலை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அண்மைக்காலமாக வவுனியாவில் இடம்பெற்று வரும் விபத்துகளை குறைக்கும் நோக்கில் இந்த செயல்பாடு முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் பா. பாலேந்திரன் மற்றும் சபை உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-10)

# சாவகச்சேரி குஞ்சர்துரவு குளம் ஒரே நாளில் தூர்வாரப்பட்டது

**நகர சபை நடவடிக்கை**

யாழ்ப்பாணம், செப். 17

60 வருடங்களுக்கு மேல் கவனிப்பாரற்று கிடந்த சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் குஞ்சர்துரவு குளம் நகராட்சி மன்றத்தால் ஒரே நாளில் தூர்வாரப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தின் ஆரம்ப நாளான நேற்று முன்தினம் மீசாலை கிழக்கு வட்டாரத்தில் நகராட்சி மன்றத்தின் நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சுமார் 60 வருடங்களுக்கு மேலாக தூர்வாரப்படாமல் நகர சபையின் கண்காணிப்பில் இருந்து விடுபட்ட பழமைவாய்ந்த குஞ்சர்துரவு குளம் உபதவிசாளர் ஞா. கிஷோர், உறுப்பினர்களான வ. பிரகாஷ், மு. கோகுல்றாஜ் ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் ஒரே நாளில் தூர்வாரப்பட்டுள்ளது.

கிராமத்தின் அடையாளமான குஞ்சர்துரவு குளத்தை தூர்வாரி பாதுகாக்குமாறு கிராம மக்கள் நீண்டகாலமாக நகர சபையிடம் கோரிக்கை முன்வைத்தும் பயனற்ற நிலையில் வட்டார உறுப்பினர் பிரகாஷ், உப தவிசாளர் கிஷோரோடு இணைந்து முன்னெடுத்த முயற்சியின் பயனாக குஞ்சர்துரவு குளம் தூர்வாரப்பட்டுள்ளது.

நகர சபையின் கடந்த மாதாந்த அமர்வில் உப தவிசாளரால் முன்மொழியப்பட்ட மரபுரிமைச் சின்னங்கள், கிணறுகள், கேணிகள், குளங்கள் என்பனவற்றை பாதுகாக்க வேண்டும் என்ற ஏகமனதான பிரேரணைக்கு அமையவே உள்ளூராட்சி வாரத்தின் முதன்நாளில் குஞ்சர்துரவு குளம் தூர்வாரும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குளம் தூர்வாரும் பணியை நகர சபை தவிசாளர் வ.சிறீபிரகாஷ், உபதவிசாளர் ஞா. கிஷோர், செயலாளர் எஸ். நிசான் ஆகியோர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

(எ-05)

# அதிக சத்தத்துடன் வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள்கள் மடக்கி பிடிப்பு

வவுனியா, செப். 17

பொது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் அதிக சத்தத்துடன் வேகமாக சென்ற மோட்டார் சைக்கிள்களுக்கு எதிராக வவுனியா போக்குவரத்து பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதி, பூங்கா வீதி என்பனவற்றில் அதிக சத்தத்துடன் வேகமாக மோட்டார் சைக்கிள்கள் சிலவற்றை இளைஞர்கள் செலுத்தி வருவதுடன், அப் பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடுவோர், வசிப்போர் மற்றும் மாணவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தி வந்ததுடன் விபத்துகளும் ஏற்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பூங்கா வீதி, வைரவப்புளியங்குளம் ஆகிய பகுதிகளில் கடமையில் ஈடுபட்ட போக்குவரத்து பொலிஸார் குறித்த மோட்டார் சைக்கிள்களை செலுத்திய சாரதிகளுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை மேற்கொண்டதுடன் மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

(எ-10)

# சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் குருபூஜை விழா

யாழ்ப்பாணம், செப். 17

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவும் மாதந்தோறும் ஈழத்துச் சமயப் பெரியார்கள் குருபூஜை விழாவும் தொடர் 06 சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் குருபூஜை விழா அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 09. 00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் ஆன்மீக விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் சைவப்புலவர் செ. த. குமரன் நிகழ்த்தும் "சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரின் சமயப் பணி" என்னும் விடப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது. சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. தொடர்ந்து ஆன்மீக விருந்தினர் உரையும் குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

தொகுப்புரையை இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் நிகழ்த்துவார்.

(எ)

# திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 17

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு சிறீ நாகதம்பிரான் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 23 எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் சைவப்புலவர் செ. த. குமரன் நிகழ்த்தும் "மாபாதகம் தீர்த்த படலம்" என்னும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(எ)

# நீர்வேலியில் சுக்கிர வார சிறப்புச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 17

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்த சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 39 ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி மாலை 05. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்த குருக்களான சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் நிகழ்த்துவார். சிறப்புச்சொற்பொழிவை இளஞ் சைவப்புலவர் த. மனோஜ்குமார் "நகர்செய் படலம்" என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார்.

நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2026இல் 6 வீத வளர்ச்சியை எதிர்பார்க்கிறது இலங்கை!

## பொருளாதார மேம்பாட்டு பிரதி அமைச்சர் அனில் ஜயந்த



கொழும்பு, செப். 17

**இலங்கை 2026 ஆம் ஆண்டில் தனது பொருளாதார வளர்ச்சியை 6 வீத வரை உயர்த்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. இதற்கு ஓரளவுக்கு சாதனை அளவிலான அரசாங்க மூலதனச் செலவுகள் தேவை. எனினும், வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்படும் தாமதங்கள் இந்த ஆண்டு அதன் செயல்திறனைக் குறைக்கக்கூடும் என்று பொருளாதார மேம்பாட்டு பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.**

2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு வருவதால், இலங்கையர்களும் முதலீட்டாளர்களும் நம்பிக்கையுடன் இருக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திரத்திற்குப் பின்னர் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடி இதுவாகும்.

இலங்கை 2024 ஆம் ஆண்டில் 5 வீத பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்தது.

வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தாமதம் அரசாங்க செலவினங்களைக் குறைத்ததால், இந்த ஆண்டு அது 4 வீதம் முதல் 4.5 வீதம் வரை குறைய வாய்ப்புள்ளது.

அரசாங்கம் 2026 ஆம் ஆண்டில் தனது மூலதனச் செலவினத்தை 8% அதிகரித்து 1.4 டிரில்லியன் ரூபாயாக (4.64 பில்லியன் டொலர்) அதிகரிக்க திட்டமிட்டுள்ளது.

2023 மார்ச் மாதம் இலங்கையை மீட்டெடுத்த சர்வதேச நாணய நிதியம், இந்த ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 3.3 வீதமாகவும், 2026 ஆம் ஆண்டில் 5.2 வீதமாகவும் இருக்கும் என்று கணித்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் பொருளாதாரம் ஆண்டுக்கு ஆண்டு 4.9 வீதம் வளர்ச்சியடைந்ததாக அதிகாரபூர்வ தரவுகள் தெரிவிக்கின்றன.

அடுத்த வருடம் எல்லாம் சிறந்ததாக இருக்கும் என்றும், உங்கள் வாழ்வாதாரம் முற்றிலும் மாறும் என்றும் நாம் மிகைப்படுத்திக் கூற முடியாது.

ஆனால் மக்களும், முதலீட்டாளர்களும் நம்பிக்கையுடன் இருங்கள் என்று நாங்கள் கூறுகிறோம்.

அரசாங்கத்தின் திட்டங்கள் வரவிருக்கும் வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெறும்.

2025 ஆம் ஆண்டில் இலங்கை மூலதனச் செலவினங்களுக்காக 1.315 டிரில்லியன் ரூபாயை ஒதுக்கியது.

ஆனால் மார்ச் மாதத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் புதிய அரசாங்கத்தால் வரவு-செலவுத் திட்டம் வழக்கத்தை விட தாமதமாக அங்கீகரிக்கப்பட்டதால் செலவு தாமதமானது.

நாடு வழக்கமாக நவம்பரில் பாராளுமன்றத்தில் அதன் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கிறது.

டிசெம்பரில் ஒப்புதலுடன், இந்த ஆண்டு அரசாங்கம் ஒரு சுழற்சியை மீண்டும் தொடங்க திட்டமிட்டுள்ளது.

இரண்டாவது காலாண்டில் செலவு அதிகரித்தது. ஆனால் இலக்கை விட குறைவாகவே உள்ளது. இதனால் முறைசாரா பொருளாதாரம் ஈடு செய்யாவிட்டால் 5 வீத மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை அடைவது கடினம்.

ஜூலை மாத இறுதியில், வரவு-செலவுத் திட்டம் செய்யப்பட்ட பணத்தில் ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே செலவிடப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு மிகவும் நன்றாக இருக்கும். ஏனென்றால் நாங்கள் சாதாரண வரவு-செலவுத் திட்ட சுழற்சியைக் கடைப்பிடிப்போம்.

சீனா, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் முதலீடுகளால் 2026 ஆம் ஆண்டில் நாடு அந்நிய நேரடி முதலீட்டை இரட்டிப்பாக்கி 2 பில்லியன் டொலருக்கும் அதிகமாக உயர்த்த முடியும்.

இருப்புக்களை அதிகரிக்க அல்லது ஏற்கனவே உள்ள முயற்சிகளுக்கு நிதியளிக்க சந்தை அடிப்படையிலான கடன் வாங்குவதை விட, பெரிய அளவிலான திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்துடன் இணைக்கப்பட்ட மூலோபாய வெளிநாட்டு கடன்களுக்கு இலங்கை முன்னுரிமை அளித்து வருகின்றது.

அதிக கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ள நாடு, 2032 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 95 வீதமாக கடனைக் குறைக்க நாணய நிதியக் கட்டமைப்புக்குள் செயல்பட்டு வருகிறது.

ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் மற்றும் சுற்றுலா மூலம் இருப்புக்களை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தும் அதே வேளையில், கடன் வாங்குதல் முக்கியமான முதலீடுகளுக்கு ஒதுக்கப்படும்-என்றார். (அ)

# மற்றுமோர் ‘ஐஸ்’ உற்பத்தி தொழிற்சாலை கண்டுபிடிப்பு

கொழும்பு, செப். 17

அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் இயங்கும் ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி தொழிற்சாலையை களுத்துறை குற்றப்பிரிவு கண்டுபிடித்துள்ளது.

இந்த சோதனையின்போது, ஐஸ் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் உபகரணங்கள், இரசாயனங்கள் மற்றும் போதைப்பொருட்களை கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் ஒரு வாகனம் ஆகியவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

ஐஸ் போதைப்பொருள் தயாரிப்பில் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மொத்தம் 52 லீற்றர் இரசாயனங்கள் அடங்கிய 14 கான்களையும், போதைப்பொருள் உற்பத்தி செயல்முறையின் ஒரு பகுதியாக நம்பப்படும் பல்வேறு உபகரணங்களையும் அதிகாரிகள் இதன்போது கண்டுபிடித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக வெள்ளவாயவைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் அண்மையில் கைது செய்யப்பட்ட பாதாள உலகக் குழு உறுப்பினர் சுரங்கவின் சகா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தோனேசியாவில் அண்மையில் பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்ட அண்மைய ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி தொழிற்சாலை இதுவாகும்.

முன்னதாக, நுவரெலியா, மீதேனிய, நெட்டோல்பிட்டிய மற்றும் கந்தான ஆகிய இடங்களில் இதுபோன்ற ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி தொழிற்சாலைகளை அதிகாரிகள் கண்டுபிடித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தெற்கு அதிவேக வீதியில் நேற்று அதிகாலை விபத்து

## பெண் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 17

தெற்கு அதிவேக வீதியில் கலனிகமவுக்கும் கஹதுடுவைக்கும் இடையே நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன் ஆறு பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த லொறி மீது பின்னால் பயணித்த வான் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் காயமடைந்த வானின் சாரதி, இரு பெண்கள் உட்பட மூவர் ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மூன்று குழந்தைகள் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 35 வயதுடைய பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சடலம் ஹோமாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் விபத்து தொடர்பில் மொரகஹஹேன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 598 நபர்கள் கைது!

கொழும்பு, செப். 17

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போது மொத்தம் 598 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக, 27,580 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 24 நபர்களை இதன்போது பொலிஸார் அடையாளம் கண்டனர்.

மேலும், பிடியாணை நிலுவையில் உள்ள 418 சந்தேக நபர்கள் இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொத்தம் 45 பேர் மதுபோதையில் வாகனம் செலுத்தியதற்காக கைது செய்யப்பட்டனர்.

மேலும் 16 பொறுப்பற்ற சாரதிகள் மற்றும் பல்வேறு போக்குவரத்து குற்றங்களை மீறிய 3,857 பேர் அடையாளம் காணப்பட்டனர்.

சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்கள், குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் மற்றும் சட்டவிரோத துப்பாக்கிகளை வைத்திருப்பவர்களைக் கைது செய்ய நாடு முழுவதும் விசேட பொலிஸ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச அதிகாரிகளுக்கு டிஜிற்றல் கையொப்பம்!

கொழும்பு, செப். 17

அரச அதிகாரிகளின் பணிகளை எளிதாகவும் திறமையாகவும் செய்ய டிஜிற்றல் கையொப்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பொது சேவைகளை டிஜிற்றல் மயமாக்கி புதிய பாதைக்கு கொண்டு செல்வதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவின் அரசு அதிகாரிகளுக்கான டிஜிற்றல் கையொப்ப அங்கீகார விழாவில் நேற்று முன் தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் எதிர்பார்க்கும் திறமையான பொது சேவையை உருவாக்குவதே தனது குறிக்கோள் என்றும், இந்த புதிய தொழில்நுட்பத்தை கிராம அலுவலர் மட்டத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

2006 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க மின்னணு பரிவர்த்தனை சட்டத்தின்படி, மாவட்ட செயலகங்கள் மற்றும் உள்துறைப் பிரிவின் பிரதேச செயலகங்களில் உள்ள அதிகாரிகளின் கையொப்பங்களை டிஜிற்றல் மயமாக்கும் செயல்முறை, உத்தியோகபூர்வ கடமைகளை எளிதாக்குவதற்கும் நெறிப்படுத்துவதற்கும் இது தொடங்கப்பட்டது.

# தனிப்பட்ட செலவுகளுக்காக ஒரு கோடி ரூபா செலவிட்டதாக கூறும் விவரம் முற்றிலும் தவறு

## கூறுகின்றார் மைத்திரிபால

கொழும்பு, செப். 17


2024 ஆம் ஆண்டு தமது தனிப்பட்ட செலவுகளுக்காக ஒரு கோடி ரூபாவை செலவிட்டதாக கூறப்படும் புள்ளிவிபரங்கள் முற்றிலும் தவறானவை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள மற்றுமொரு வீட்டுக்கு தாம் இடம்பெயரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது, முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரது வீடுகளும் மூடப்பட்டுள்ளன.

அவற்றை வன விலங்குகள் ஆக்கிரமித்துள்ளன.

இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட வீட்டில் இருந்து வெளியேறுவதில் எனக்கு எந்தவிதமான கவலையும் இல்லை.



அதன்படி எதிர்வரும் ஓரிரு நாட்களில் உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறவுள்ளேன் -என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்

**முன்னாள் எம். பி. கஜேந்திரன் வலியுறுத்தல்**




திருகோணமலை, செப். 17

தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். சமஷ்டி தீர்வை பெற்றுத்தர இந்திய அரசு முன்வர வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

தியாக தீபம் திலீபனின் 38 ஆவது நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலை சிவன் கோவிலடி முன்றலில் நேற்றுக்காலை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"1987இல் இந்திய இராணுவம் ஈழ மண்ணில் அமைதிப் படை எனும் பேரில் கால் பதித்த போது தமிழ் மக்களுடைய பாதுகாப்புக்காக ஆயுதங்களை கையில் வைத்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகள், இந்திய அரசு அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் ஆயுதங்களை இந்தியப் படையிடம் கையளித்தனர். இதன் மூலமாக தமிழ் மக்களுடைய பாதுகாப்பை இந்தியா பொறுப்பேற்றது. இதன் பின்னர் சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளரின் தலைமையில் தமிழர்களுக்கு எதிராக படைகளை வைத்து ஒடுக்குமுறைகளை கொண்டு வந்தார்கள். குறிப்பாக அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் ஊர்காவல் படைகளை வைத்து எங்கள் மக்களை சித்திரவதை செய்து, அடித்து விரட்டி கடத்தி நிலங்களை கபளீகரம் செய்தனர். விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை இந்தியப் படையிடம் கையளித்திருந்த நிலையில் எங்கள் மக்களை பாதுகாக்க வேண்டும். தமிழர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும், ஒற்றையாட்சி தீர்வு தமிழர்களை பாதுகாக்காது ஆகவே வடக்கு கிழக்கில் இடைக்கால நிருவாகம் ஏற்படுத்தித் தர வேண்டும். அப்போது ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது இடைக்கால நிருவாகத்தை ஏற்படுத்தி தருவதாக புதுடில்லியில் வைத்து புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் வாக்குறுதியளித்திருந்தார். இருப்பினும், அட்டூழியங்கள் தொடர்ந்தன. புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளராக இருந்த திலீபன் உண்ணாவிரதம் இருந்து உயிரைத் துறந்தார். 38 ஆண்டுகள் கடந்தும் ஒற்றையாட்சிக்குள் 13ஆம் திருத்தத்தை தீர்வாக திணிக்கின்றனர். தமிழ்ச் சமூகத்தில் அக்கறையில்லாது 13ஐ மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றனர். தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். சமஷ்டி தீர்வைப் பெற்றுத்தர இந்திய அரசு முன்வர வேண்டும். இனப்படுகொலைக்கு எதிராக உடனடியாக சர்வதேச குற்றவியல் விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டும் என சர்வதேசத்திடமும் இந்தியாவிடமும் கேட்டுக்கொள்கிறோம்"- என்றார். (எ-12)

# "குருக்கள்மடம் இராணுவ முகாம் உடனடியாக அகற்றப்பட வேண்டும்"

மட்டக்களப்பு, செப். 17

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட குருக்கள்மடம் இராணுவ முகாம் உடனடியாக அகற்றப்பட வேண்டும். அதன் அருகிலுள்ள சிறுவர் பூங்கா எமது பிரதேச சபைக்குச் சொந்தமானது என மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர் வினோராஜ் தெரிவித்தார்.

குருக்கள்மடம் சிறுவர் விளையாட்டு பூங்கா கவனிப்பாரற்ற நிலையில் கடந்த 10 வருடங்களாக பாவனைக்குதவாத நிலையில் காணப்படுகிறது.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இராணுவம் குருக்கள்மடம் பழைய பாடசாலைக்கு வருகை தந்து அங்குள்ள கட்டடங்களில் முகாம் அமைத்து தற்போது வரையில் அங்குள்ளனர். இதனால், சிறுவர்களும் பெரியவர்களும் விளையாட்டு முற்றத்துக்கு செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

இந்த நிலையில் குறித்த விளையாட்டு முற்றத்தை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் வினோராஜ் பார்வையிட்டுள்ளார்.

பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படும் சிறுவர் விளையாட்டு பூங்காவை குருக்கள்மடம் மக்களின் கோரிக்கைக்கு இணங்க உடனடியாக புனரமைப்புச் செய்து, மக்கள் பாவனைக்காக வெகுவிரைவில் விடப்படும் என தவிசாளர் தெரிவித்தார். (எ)

# நான்கு நாட்களாக வழிமாறித் திரிந்த யானைக் கூட்டம்

மட்டக்களப்பு, செப். 17

கடந்த நான்கு நாட்களாக வழிமாறித் திரிந்த காட்டு யானைக் கூட்டத்தால் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தின் நகர்ப்பகுதிகளில் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி மட்டக்களப்பு வாவியை நீர் வழியாக ஊடறுத்து புதுக்குடியிருப்பு கிராமத்துக்குள் உட்புகுந்த காட்டு யானைகள் திசை மாறி தினம் தினம் ஊர் ஊராக சுற்றித் திரிந்ததை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறே புதுக்குடியிருப்பு, கிரான்குளம், குருக்கள்மடம், செட்டிப்பாளையம், மாங்காடு, தேற்றாத்தீவு, களுதாவளை, களுவாஞ்சிக்குடி, எருவில், மகிழூர், ஊடாகச் சென்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கோட்டைக்கல்லாறு ஆற்றங்கரையை அண்மித்த புதர் காடுகளில் 3 காட்டு யானைகளும் தரித்து நின்றதாக அப்பகுதி மக்கள் கூறினர்.

காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புப் பகுதியால் ஊடறுத்துச் செல்லும்போது பயிர்களையும் பயன்தரு மரங்களையும் சேதப்படுத்திச் சென்றதாக அப்பகுதி பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் மே. வினோராஜ் உள்ளிட்ட பிரதேச சபை உறுப்பினர்கள் காட்டு யானைகள் திடீரென தமது பிரதேச நகர்ப்பகுதிக்குள் உள்நுழைந்துள்ளமை குறித்து வனஜீவராசிகள் பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில் திங்கட்கிழமை இரவு மிகவும் பிரயத்தனத்துக்கு மத்தியில் பொதுமக்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அனவரினதும் ஒத்துழைப்புடன் வனஜீவராசிகள் பாதுகாப்புப் பிரிவினர் மீண்டும் 3 காட்டு யானைகளையும் மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து படுவாங்கரைப் பகுதிக்குள் துரத்தி அனுப்பினர். (எ)

# சம்மாந்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நடமாடும் சேவை

சம்மாந்துறை, செப். 17

"வளமான நாடும் அழகான வாழ்க்கையும்" எனும் தொனிப்பொருளின் கீழ் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் "மறுமலர்ச்சி நகரம்" எனும் தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு தவிசாளர் எம். மாஹிர் தலைமையில் அப்துல் மஜீட் மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையில் சுற்றுச்சூழல், கிராம மட்ட பிரச்சனைகள், தேசிய அடையாள அட்டை, அஸ்வெசும நலன்புரித் திட்டம், ஆதனவரி, காணி, கட்டடம், வியாபார அனுமதிப் பத்திரம், முறைப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளுக்குத் தீர்வு வழங்கப்பட்டதோடு, அவைகள் தொடர்பான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன. (எ)

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு

திருகோணமலை, செப். 17

தியாக தீபம் திலீபனின் 38 ஆவது நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலை சிவன் கோவிலடி முன்றலில் நேற்றுக்காலை இடம்பெற்றது. வாகனப் பேரணியுடன் தியாக தீபம் திலீபனின் படங்களுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், கட்சியின் மாவட்ட கிளை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# கல்முனை மாநகர சபையால் விசேட நடமாடும் சேவை

கல்முனை, செப். 17

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட விசேட நடமாடும் சேவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கருத்திட்டத்துக்கு அமைவாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலின் பேரில் கல்முனை மாநகர சபை ஆணையாளர் எம். றாபி தலைமையில் கல்முனை மாநகர சபை எல்லையினுள் உள்ளூராட்சி வார செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக இடம்பெற்ற நடமாடும் சேவையின் போது கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தகர்கள் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலுள்ள வியாபாரிகளின் நீண்ட காலப் பிரச்னைகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டன.

அத்துடன் கல்முனை மாநகர பஸாரில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு களவிஜயம் மேற்கொண்ட மாநகர சபை உத்தியோகத்தர் குழுவினரால், வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல்களும் தெளிவூட்டல்களும் வழங்கப்பட்டன. (எ)



# நாட்டின் போக்கை தீர்மானிக்க ஓர் அரசியல் போராட்டம் தேவை

**மஞ்சுள சுரவீர எம். பி. தெரிவிப்பு**

நுவரெலியா, செப். 17

ஒரு நாட்டின் போக்கை தீர்மானிக்க ஓர் அரசியல் போராட்டம் தேவை என்று நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுரவீர ஆராய்ச்சி தெரிவித்தார்.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வளமான நாடு அழகான வாழ்க்கை எனும் தொனிப்பொருளில் ஹற்றன் டிக்கோயா நகர சபையில் உள்ளூராட்சி வார ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

"இரண்டு முகாம்களுக்கு இடையே ஒரு போராட்டம் இருக்க வேண்டும்.

எனக்கு மனசாட்சி மோதல் இருப்பதால் நான் இன்று இங்கு பேசுகிறேன்.

சமூகத்தில் மோதலை சரியான பக்கத்துக்கு கொண்டு செல்ல, ஓர் அரசியல் போராட்டம் இருக்க வேண்டும். கருத்து மோதல் இருக்க வேண்டும்.

அந்த மோதலின் சிறந்ததை சமூகமயமாக்குவது நமது பொறுப்பு.

அந்த சரியானதை சமூகமயமாக்கி அந்த வேலையைச் செய்வது நமது பொறுப்பாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

நவீனத்துவத்துக்கும் பழங்காலத்துக்கும் இடையிலான மோதலை நாம் காண்கிறோம்,

ஒரு பக்கம் திருட்டு, வீணாக்குதல், ஊழல் உள்ளது. மறுபுறம் திருட்டு, ஊழல் மற்றும் வீணாக்குதல் ஆகியவற்றுக்கு எதிரான மோதல் உள்ளது.

ஒரு பக்கம் போதைப்பொருள் கடத்தல் மற்றும் மறுபுறம் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான மோதல் உள்ளது.

நாங்கள் எதிர் பக்கத்தில் இருக்கிறோம். இந்த மோதல் முறையுடன் நாங்கள் முன்னேறி வருகிறோம்.

இந்த மோதல்களில் நாங்கள் எப்போதும் வெற்றி பெறுகிறோம். ஏனென்றால் நாங்கள் நீதிக்காகப் பேசும் நவீனவாதிகள்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெகலிய...

பத்திரிகைகள் மூன்று நீதிபதிகள் கொண்ட ஆயத்தில் நேற்றைய தினம் தாக்கல் செய்யப்பட்டன.

போலி இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்ததன் மூலம் அரச நிதி மோசடி, தவறான பயன்பாடு இடம்பெற்றதாக கெஹலிய உட்பட 12 பேர் மீதும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில், நீண்ட விளக்கத்தின் பின்னர் பிரதிவாதிகள் 12 பேரையும் தலா 5 இலட்சம் ரூபாய் ரொக்கப் பிணை, தலா 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீரப் பிணைகளின் கீழ் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவர்களை பிணையில் விடுவிக்க சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி ஹிரிஹாகம கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். (ஐ)

## 223 கோடி...

தொடர்பான பட்டப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்படி, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியியல், தாதியியல் துறைகளில் மூன்று பட்டப்படிப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது, இங்கு மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியியல், தாதியியல் மற்றும் உடற்கல்வி ஆகிய நான்கு பாடத்துறைகளில் அனைத்து இனங்களையும் சேர்ந்த 952 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர் என்று அமைச் சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

மேலும், 2017ஆம் ஆண்டு துணை சுகாதார விஞ்ஞான பீடத்திற்கான கட்டடத்தை நிர்மாணிக்க அமைச்ச ரவை ஒப்பு தல் வழங்கியிருந்தாலும் நிதி நெருக்கடி காரணமாக அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதனால், பீடத்தில் உட்கட்டமைப்பு வசதி பற்றாக்குறை நிலவி வருகிறது. இதனை நிவர்த்தி செய்யும் விதமாகவே புதிய கட்டடம் அமையவுள்ளது - என்றார். (ஐ)

## இ.போ.ச....

இலங்கை போக்குவரத்து சபையின் 25 சாலைகளை நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக 750 புதிய சாரதிகளையும், நடத்துநர்களையும் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அத்துடன், இலங்கை போக்குவரத்து சபை மீண்டும் கட்டமைக்கப்பட்டு இலாபகரமான நிறுவனமாக மாற்றப்படும் - என்றார்.

## அரிசியை...

அரிசியை இறக்குமதி செய்வதற்கான அனுமதி ஏற்கனவே பெறப்பட்டுள்ளது.

தேவை ஏற்பட்டால் குறித்த கீரி சம்பா அரிசி தொகையை இறக்குமதி செய்ய முடியும். எனினும், அது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. அறுவடையை கருத்தில் கொண்டு உணவு பாதுகாப்பு குழுவில் கலந்துரையாடி அமைச்சரவைக்கு அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மிகப்பெரிய அரிசி ஆலை உரிமையாளர்களை வலுப்படுத்த திறைசேரியிலிருந்து குறிப்பிடத்தக்க தொகை ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கான சிறந்த பெறுபேறுகளும் கிடைத்திருந்தன. இவ்வாறான நிலையில் அநாவசியமாக அரிசி தட்டுப்பாடு ஏற்படுத்த முயற்சிக்கப்படுமாயின், அரிசியை இறக்குமதி செய்யமுடியும். கீரி சம்பா அரிசிக்கு மாற்றீடை கொண்டு வருவது குறித்தும் அனுமதி பெறப்பட்டுள்ளது. இதனால், அதற்கு ஏற்பவும் செயல்பட முடியும் - என்றார். (ஐ)

## மின்சார...

மேலும், அரசாங்கத்தின் இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் சகல ஊழியர்களும் இரு குழுக்களாக சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். இந்த நாட்களில் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிராக எதிர்ப்பு போராட்டத்தையும் முன்னெடுப்போம். இந்தப் போராட்டத்துக்காக சுமார் 21 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் கொழும்பில் ஒன்றிணைவார்கள் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மறுசீரமைக்கப்பட்டுள்ள மின்சார சபையுடன் இணைந்து செயல்பட முடியாத ஊழியர்கள் சேவையில் இருந்து விலக முடியும் என்று நேற்றைய தினம் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மட்டக்களப்பு...

பெறவுள்ளார்.

இதனடிப்படையில், தற்போது ஜே. எஸ். அருள்ராஜை அரசாங்க அதிபராக நியமிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இவர், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக தற்போது பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மாகாண சபை...

செய்வதற்கான வாய்ப்பை மகிந்த ராஜபக்ஷ ஏற்படுத்திக் கொடுத்தார். தோல்வியெனத் தெரிந்தும் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி - சபையை நிறுவினார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே. வி. பி. என்பன இணைந்தே 2015இல் நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்கின. எனினும், சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் எழுச்சிக்கு அஞ்சி, மாகாண சபைகள் தேர்தல் காணாமல் ஆக்கப்பட் டது. அரசுக்குரிய மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இல்லாதபோது அதற்கு ஜே. வி. பி. ஆதரவளித்தது.

அந்தவகையில் தேர்தலைப் பிற்போடும் சூழ்ச்சிக்கு ஜே. வி. பியும் துணை நின்றுள்ளது. இன்று ஜனநாயகம் பற்றி அந்தக் கட்சியினர் பாடமெடுக்கின்றனர். முடிந்தால் தேர்தலை நடத்திக் காட்ட வேண்டும்." - என்றார். (ஐ)

## வெளிநாடு....

நாட்டின் அரசமைப்பின்படி, வாக்களிக்கும் உரிமையானது தற்போது நாட்டில் வசிக்கும் - தேர்தல் சட்டத்தின்படி வாக்காளர் பதிவில் பெயர் பதிவு செய்துள்ள பிரஜைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய தேர்தல் சட்டத்தின்படி வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் வாக்களிக்க எந்த விதமான ஏற்பாடுகளும் இல்லை. அதற்கான சட்டமும் இதுவரை இயற்றப்படவில்லை.

இந்தியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் போன்ற பல ஆசிய நாடுகள் வெளிநாடுகளில் உள்ள தங்கள் பிரஜைகளுக்கு வாக்குரிமை வழங்கும் சட்ட திட்டங்களை ஏற்கனவே உருவாக்கியுள்ளன. இதேபோன்று, இலங்கையிலும் இத்தகைய சட்டங்களை மாற்றுவது காலத்தின் தேவையாகக் கருதப்படுகிறது. இதற்கமைய, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இது தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் வாக்களிப்பது தொடர்பில் ஆராய குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது. இந்தக் குழுவில் தேர்தல்கள் ஆணைக்குழு, வெளிவிவகார அமைச்சு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு, சுற்றுலாத்துறை அமைச்சு, பொது நிர்வாகம் மற்றும் மாகாண சபைகள் உள்ளிட்ட அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகள் அங்கம் வகிப்பர். இந்தக் குழு, தேவையான சட்டத் திருத்தங்கள் மற்றும் புதிய சட்ட வடிவமைப்புகளுக்கான பரிந்துரைகளை முன்வைக்கும். (ஐ)

சொகுசு வீடு விவகாரம்

# தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுக்கின்றார் பிரதி அமைச்சர்!



கொழும்பு, செப். 17

சினமன் லைப் வளாகத்தில் ஒரு சொகுசு வீட்டை வாங்கியதாக சமூக ஊடகங்களில் பரவி வரும் குற்றச்சாட்டுகளை பொது பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல மறுத்தார்.

இந்தக் கூற்றுகள் தவறானவை என்றும், தனது நற்பெயருக்கு கலங்கம் விளைவிக்கும் நோக்கம் கொண்டவை என்றும், தனது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அனைத்தும் தனது அதிகாரபூர்வ சொத்து வெளிப்படுத்தல்களில் முறையாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் முறைப்பாடு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தவறான தகவல்களுக்கு காரணமானவர்களுக்கு எதிராக நட்ட ஈடு கோர சிவில் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கைகள் தொடங்கப்படும்,

கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையை ஆதரிக்கும் அதே வேளையில், தீங்கு விளைவிக்கும் அல்லது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைப் பரப்புவதற்கு அதைப் பயன்படுத்தக்கூடாது என்றும் அவர் கூறினார். (அ)

## கண்காணிப்புடன்...

சுயாதீன வழக்குத்தொடுநர் பணிமனையை நிறுவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடு வரவேற்கத்தக்கது. எனினும், அத்தகைய கட்டமைப்பை நிறுவி அதனை முழுமையாக இயங்கச்செய்வதற்கு மாதங்களோ அல்லது வருடங்களோ ஆகலாம். அது மாத்திரமின்றி அதனைச் செய்வதற்கான போதுமான அரசியல் தன்முனைப்பு வெளிக்காட்டப்படவேண்டும். அத்துடன், சுயாதீன வழக்குத்தொடுநர் பணிமனை நிறுவப்படும் எனக் கூறுவது மாத்திரம் போதுமானதன்று. மாறாக, அதுகுறித்து நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் அவசியமான மறுசீரமைப்புகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இதுவரை, சுமார் 10 வெவ்வேறு ஆணைக்குழுகள் நிறுவப்பட்ட பின்னரும்கூட போர் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல் தொடர்பில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படவில்லை. குற்றவாளிகளைப் பாதுகாக்கும் உள்ளகப் பொறிமுறைகள்மீது பாதிக்கப்பட்ட தரப்பினரும் அவர்களின் குடும்பத்தினரும் இழப்புகளுக்கு முகங்கொடுத்த சமூகத்தினரும் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள். இவ்வாறானதொரு பின்னணியில் அரசாங்கத்தின் ஒடுக்குமுறை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினர் இலங்கை தொடர்பான பொறுப்புக் கூறல் செயல் திட்டத்துடன் தொடர்புகளை பேணி வந்திருக்கிறார்கள்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தொழில்நுட்ப உதவிகளுடன் உள்ளக பொறுப்புக்கூறல் பொறி முறையை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தயாராகி வருவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், இதுவரையில் அர்த்தமுள்ள முன்னேற்றங்கள் எவையும் அடையப்படாத நிலையில், இந்த முன் மொழிவு மீண்டுமொரு தோல்விக்கே வழிவகுக்கும்.

அதுமாத்திரமின்றி பாதுகாப்பு துறை மறுசீரமைப்புகள் மற்றும் சாட்சியாளர்களைப் பாதுகாப்பதற்கான கட்டமைப்பு என்பன நம்பத்தகுந்த உள்ளக பொறுப்புக்கூறல் பொறிமுறையை நிறுவுவதற்கு மிக அவசியமானவை. எனினும் அவை தற்போது நடை முறையில் இல்லை. மாறாக, நீதியைக் கோரிப் போராடுபவர்கள் அரசாங்கத்தின் படைத் தரப்பின் தொடர் அடக்குமுறைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். எனவே, 2015ஆம் ஆண்டு பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்ட செயல்திறன்மிக்க சர்வதேச பங்கேற்பின்றி, தனித்த உள்ளக பொறுப்புக்கூறல் பொறிமுறையினால் பாதிக்கப்பட்ட தரப்பினரின் ஆதரவையும் பங்கேற்பையும் உறுதிப்படுத்த முடியாது.

கடந்த 2024 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் ஆட்சிப் பீடமேறி ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ள நிலையில், கடந்தகால மீறல்கள் தொடர்பிலும், மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இலங்கையில் சர்வதேச மனிதாபிமான சட்டத்துக்கு எதிரான மிகமோசமான மனித உரிமைகள் மீறல் இடம்பெற்றமைக்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்கள் ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைகள் ஊடாகக் கண்டறியப்பட்டன.

எனினும், உள்ளக நிலைமாறுகால நீதிப்பொறிமுறைக்கான நம்பகத்தன்மையை சிறுபான்மையின மக்கள் மத்தியில் கட்டியெழுப்புவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க கடந்தகால அரசாங்கங்கள் தவறிவிட்டன.

இவ்வாறான பின்னணியில் இலங்கை தொடர்பான ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பு தொடரும் அதேவேளை, இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயல்திட்டத்தின் ஊடாக ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனைக்கு வழங்கப்பட்ட ஆணையை குறைந்தபட்சம் மேலும் இரு வருடங்கள் காலநீடிப்பு செய்யஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

## போதைப்...

காலப் பகுதியுடன் ஒப்பிடும்போது 41 சதவீத அதிகரிப்பாகும்.

2024இல் 832.3 கிலோ ஹெரோயின், 8,359 கிலோ கஞ்சா மற்றும் 1,364 கிலோ ஐஸ் போதைப்பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மாகாண...

நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ளனர். சூரிய சக்தியை ஊக்குவிப்பதற்கு நான் எதிரானவன் அல்ல. ஆனால், 800 ஏக்கர் விவசாய காணியில் 200 ஏக்கர் காணியை அபகரித்து, சூரிய சக்தி திட்டங்களுக்கு வழங்க எடுத்த நடவடிக்கைக்கு எதிர்ப்பை தெரிவிக்கிறேன். அத்துடன், இந்தப் பகுதி மக்களின் பிரச்னைகளுக்கு நாம் நிச்சயம் தீர்வு பெற்றுத் தருவோம் - என்றார்.

மேலும், மாகாண சபைகள் தேர்தலை நடத்தப் போவதாக அரசாங்கம் தெரிவிக்கிறது. மாகாண சபைகள் தேர்தலை நடத்துமாறு நாமும் கூறுகிறோம். மாகாண சபைகள் தேர்தலை நடத்துங்கள், இந்தப் பிரதேச மக்கள் மாத்திரமல்லர், விசேடமாக முழு நாட்டு மக்களும் அரசாங்கத்துக்கு நல்ல பாடம் புகட்டுவர். அரசாங்கத்துக்கு பதிலொன்றை வழங்க திருகோணமலை மாவட்ட மக்கள் மாத்திரமல்லாது முழு நாட்டுமக்களுமே காத்துக் கொண்டிருக்கின்றனர். எனவே, உடனடியாக மாகாண சபைகள் தேர்தலை நடத்துங்கள் - அதுவே எமது விருப்பமும் - என்றார். (ஐ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அரசியல் பலம் இல்லாவிட்டாலும் மக்கள் என்னுடன் இருக்கிறார்கள்

## மகிந்த ராஜபக்ஷ பெருமிதம்





கொழும்பு, செப். 17

**அரசியல் பலம் இருந்தாலும் இல்லாவிடினும் மக்கள் என்னுடன் இருக்கிறார்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

அந்தப் பதிவில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

என் வாழ்க்கையில் அதிக நேரத்தை மக்களிடையே கழித்தேன். இன்றும் அதேதான். அந்த பதவிக்காலம் முடியலாம், ஆனால் மக்களின் அன்பு அந்த பதவிக்காலத்தை விட அதிகமாக உள்ளது. அது இன்னும் முடிவடையவில்லை. அதிகாரம் இல்லாத காலத்தில் மக்கள் மகிந்த ராஜபக்ஷவுடன் இருந்தார்கள்.

கிராமத்தில் நட்பு, உறவுகள் எங்களுக்குப் பழக்கமாகிவிட்டன. சிறு குழந்தைகளின் உரையாடல்கள் என்னை மகிழ்ச்சியடையச் செய்கின்றன. முன்னாள் ஜனாதிபதியுடன் சிறு குழந்தைகள் பேசாததால் இந்த பேச்சுக்கள் சுவாரஸ்யமாக உள்ளன. அதனால் நான் அதை ரசிக்கிறேன். உணர்ச்சிகள் மூலம் நாட்டு மக்களை இணைக்காத ஒரு அரசியல்வாதி ஒருபோதும் மக்களின் தலைவராக இருக்க முடியாது.

கார்ல்டன் வீட்டிற்கு வந்த நாளிலிருந்து இன்று வரை வந்து ஆசீர்வதித்த மாண்புமிகு மகா சங்கரத்திற்கு வணக்கப்பூர்வ நன்றிகள். வந்து வாழ்த்திய அன்பான மக்கள், அரசியல் சகாக்கள் மற்றும் பல்வேறு நிபுணர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனவெறி இல்லாத மக்கள் தலைவராக, உங்கள் அண்டை வீட்டாராக, உங்கள் நெருங்கிய நண்பராக இருப்பதில் நான் பணிவுடன் பெருமைப்படுகிறேன்.-என குறிப்பிட்டுள்ளார். (அ)

# நாமலை சந்தித்த இந்தியத் தூதுவர்

கொழும்பு, செப். 17

இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று முன் தினம் திங்கட்கிழமை கொழும்பில் அமைந்துள்ள இந்திய இல்லத்தில் இடம பெற்றுள்ளது.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான இருதரப்பு இராஜதந்திர உறவு குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)



# சதீஷ் கமகேக்கு மறியல் நீடிப்பு!

கொழும்பு, செப். 17

பணச்சலவை தடுப்புச் சட்டத்தின் கீழ் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சதீஷ் கமகேயை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது,இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் சந்தேக நபரின் சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களை பரிசீலித்த பின்னர் கொழும்பு பிரதம நீதவான் அசங்க எஸ்.போதரகம சந்தேக நபரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதன்போது, சந்தேக நபரின் பிணை கோரிக்கை மனுவும் நீதவானினால் நிராகரிக்கப்பட்டது. (அ)

# ஒதுக்கீட்டுச் சட்டமூலம் செப். 26 இல் முன்வைப்பு

கொழும்பு, செப். 17

2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்துக்குரிய ஒதுக்கீட்டு சட்டமூலம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இது வரவு- செலவுத் திட்டத்தின் முதலாம் வாசிப்பாகக் கருதப்படும்.

அதன்பின்னர் வரவு- செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 07 ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் சபையில் முன்வைக்கப்பட்டு, அவரின் பாதீட்டு உரை இடம்பெறும். இது இரண்டாம் வாசிப்பாகக் கருதப்படும்.

வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 8 முதல் 14 ஆம் திகதிவரை நடைபெறும். 14 ஆம் திகதி மாலை இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

பாதீட்டில் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் (மூன்றாம் வாசிப்பு) நவம்பர் 15 ஆம் திகதி முதல் டிசெம்பர் 05 ஆம் திகதிவரை நடைபெறும். பாதீடு மீதான இறுதி வாக்கெடுப்பு 5 ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

பாராளுமன்றம் வழமையாக 9.30 மணிக்கே கூடும். எனினும், பாதீட்டு கூட்டத்தொடர் நடைபெறும் நாட்களில் காலை 9 மணிக்கு சபையை கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# உலக வங்கி பிரதிநிதிகளை சந்தித்தார் ஜனாதிபதி அநுர!



கொழும்பு, செப். 17

உலக வங்கி குழுமத்தின் தெற்காசிய பிராந்தியத்திற்கான உப தலைவர் ஜோஹன்னஸ் ஸட் உள்ளிட்ட உலக வங்கி குழும பிரதிநிதிளை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக வங்கி குழுவின் தெற்காசிய பிராந்தியத்திற்கான உப தலைவர் ஜோஹன்னஸ் ஸட் உள்ளிட்ட உலக வங்கி பிரதிநிதிகள் நேற்று முன் தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையின் தற்போதைய பொருளாதாரத் திட்டத்திற்கு பாராட்டு தெரிவித்த உலக வங்கி பிரதிநிதிகள், பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் பரிந்துரைத்தனர்.

டிஜிற்றல் மயமாக்கல், சுற்றுலா, விவசாயம் மற்றும் உள்கட்டமைப்பு, வடக்கு மற்றும் கிழக்கின் வளர்ச்சி உள்ளிட்ட குறுகிய காலத்தில் பயனடையக்கூடிய பகுதிகளை அடையாளம் கண்டு ஊக்குவிப்பதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

அரசாங்கத்தால் உலக வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்திற்கான உதவியை இலங்கை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது என்பதும் தெரியவந்தது.

நாட்டுக்கு புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்குத் தேவையான சட்ட கட்டமைப்பைத் தயாரிப்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் அதற்கான அரசாங்கத்தின் கொள்கைத் திட்டம் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இலங்கையின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தவும் பொருளாதார வளர்ச்சியை அடையவும் அரசாங்கம் பாடுபடுவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, சர்வதேச அளவில் ஊழல் நிறைந்த நாடாக முத்திரை குத்தப்பட்ட இலங்கை, தற்போதைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் வெளிப்படையான திட்டத்தின் காரணமாக படிப்படியாக பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் நிலையானதாக மாறி வருவதாக கூறியுள்ளார். (அ)

# தமிழக மீனவர்களின் பிரச்னைக்கு அரசியல் ரீதியான தீர்வு வேண்டும்!

## இலங்கைக் கடற்படை வலியுறுத்து

கொழும்பு, செப். 17

தமிழக மீனவர்கள் வடக்கு கடலில் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது நீண்ட காலமாக தீர்க்கப்படாத பிரச்னையாகவுள்ளது. கடற்படையினர் என்ற ரீதியில் இந்த பிரச்னை தொடர்பில் எடுக்கப்படக்கூடிய சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றபோதிலும், இந்த பிரச்னைக்கு அரசியல் ரீதியான இராஜதந்திர தீர்வொன்று காணப்படவேண்டும் என கடற்படை வலியுறுத்தியுள்ளது.

கடந்த சகல அரசாங்கங்களிடமும் இது வலியுறுத்தப்பட்டுள்ளதாக கடற்படை அதிகாரிகள் பிரதானி ரியர் அட்மிரல் டேமியன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பு கோட்டையிலுள்ள கலங்கரை விளக்கம் உணவக வளாகத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழக மீனவர்கள் வடக்கு கடலில் சட்ட விரோத மீன் பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது எமது வாழ்நாள் முழுவதும் எதிர்கொள்ளும் பிரச்னையாகவுள்ளது. கடற்படையினர் என்ற ரீதியில் இந்த பிரச்னை தொடர்பில் எடுக்கப்படக் கூடிய சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருக்கின்றோம்.

இது தொடர்பான தரவுகளையும் நாம் அவ்வப்போது ஊடகங்களுடன் பகிர்ந்து கொண்டிருக்கின்றோம். எவ்வாறிருப்பினும் இந்த பிரச்னைக்கு அரசியல் ரீதியான தீர்வொன்று காணப்பட வேண்டும் என்பதை கடந்த சகல அரசாங்கங்களிடம் நாம் வலியுறுத்தியிருக்கின்றோம்.

இந்திய கடற்படை மற்றும் இந்திய கரையோர பாதுகாப்பு படையுடன் எமது நட்புறவு தொடர்ந்தும் சுமூகமாகப் பேணப்படுகிறது. இது குறித்த புதிய வழிமுறைகளை நாம் அரசாங்கத்திடம் யோசனைகளாக முன்வைத்திருக்கின்றோம். அதற்கமைய வடக்கு மீனவ சமூகங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்த பிரச்னை காலி கலந்துரையாடலில் முக்கிய விடயமாகப் பேசப்படும். நாமும் அதில் அவதானமாக இருக்கின்றோம்.

அத்தோடு எமது கடற்பரப்பின் ஊடாக இடம்பெறும் போதைப்பொருள் உள்ளிட்ட ஏனைய சட்டவிரோத பொருட்கள் கடத்தல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளன. சகல நாடுகளுடனும் இணைந்து கடல் வழியூடான போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறிருப்பினும் நூறு சதவீதம் அவை கட்டுப்படுத்தப்படவில்லை. எவ்வாறிருப்பினும் சட்ட ரீதியாக புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org